சிவஷண்முகம் பழனியப்பன்
shridevi@live.com

# எண்ணிப்பார்த்தல்

எண்ணியதைப் பார்க்கிறோமா? நாம் எண்ணியபடி நடக்கிறதா? எண்ணியது சரிதானா? நினைத்தபடி நடக்கிறதா? எது நடக்கும் என நினைக்கிறோமோ, எண்ணுகிறோமோ, அது expected value. எதைப் பார்க்கிறோமோ அது observed value. நினைத்தது (திட்டம்) சரி எனும்போது நினைத்ததற்கும், பார்த்ததற்க்கும் எந்த வேறுபடும் இருக்காது. எண்ணியதையே பார்ப்போம். [expected value] = [observed value]; [expected value] - [observed value]=0. பார்ப்பது நினைத்ததிலிருந்து வேறுபட்டு இருந்தால் நாம் எண்ணியதில், நினைத்ததில் பிழை [error] இருக்கிறதென அர்த்தமாகும். [expected value] ≠ [observed value]; [expected value] - [observed value] = [error]. எண்ணியது பார்த்ததிலிருந்து எந்த அளவிற்கு விலகியிருக்கிறது என்பதை கணக்கிடும் முறைக்குப் பெயர் திட்டவியல் என்பதாகும்.




திட்டவியலில் உள்ள t – test, f – test, z – test, chi square test, hypothesis test போன்றவைகள் எண்ணியது பார்த்ததிலிருந்து எந்த அளவிற்கு விலகியிருக்கிறது என்பதை கணக்கிடும் முறைகளாகும்.

இதே ரீதியில், குழுக்கள் எந்த அளவிற்கு வேறுபட்டு இருக்கின்றன என்பது கணக்கிடப்பாடுகிறது.